முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை: திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் அக்டோபர் மாதம் 10ம் தேதி வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.1/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.2/2025
இன்
அசல் வழக்கு எண்.453/2008
(C/W) அசல் வழக்கு எண்.489/2008
-----

1) ஒய்யம்மாள்
2) செல்வம்
3) பாண்டி
4) விஜயன் ... மனுதாரர்கள்/8 முதல் 11 பிரதிவாதிகள் OS No.489/2008ல்

/ எதிர்/

M. மருதன் (இறப்பு) ... 1ம் வாதி OS No.489/2008ல்
இராக்கம்மாள் (இறப்பு) ... 5ம் வாதி OS No.489/2008ல்

1) A. மருதன்
2) சிட்டம்மாள் ... 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் OS No.453/2008ல்
3) A.மருதன்
4) முருகன்
5) கருப்பையா

6) தனம்
7) ரவிக்குமார்
8) மகாலெட்சுமி
9) தங்கத்தாய்
10) பரமேஸ்வரி
11) ஆண்டிச்சாமி
12) பாண்டியம்மாள்
13) பஞ்சம்மாள் ... 3 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 4, 6 முதல் 13 வாதிகள் OS No.489/2008ல்

இறுதியாக, இம்மனுக்கள் 25.09.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3 முதல் 13 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பு தரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## பொதுவான உத்தரவு

மனுதாரர்கள்/8 முதல் 11 பிரதிவாதிகள் (OS No.489/2008ல்) தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் வா.சா.1ஐ குறுக்கு

விசாரணை செய்ய வேண்டி மீண்டும் re–open செய்யவும், வா.சா.1ஐ மீண்டும் recall செய்ய வேண்டி கட்டளை 18 விதி 17ன் கீழ் இந்த இரண்டு மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனுக்கள் சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**

1.1) மனுதாரர்கள்/8 முதல் 11 பிரதிவாதிகள் (OS No.489/2008ல்) தரப்பில் அசல் வழக்கில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மீண்டும் re–open செய்யவும், பி.வா.சா.1ஐ மீண்டும் recall செய்ய வேண்டியும் இந்த இரண்டு மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.

1.3) மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>2) தீர்வு</u>**

2.1) மேற்படி இரண்டு இடைநிலைமனுக்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால் பொதுவான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2.2) மேற்படி மனுக்களை பரிசீலனை செய்ததில், OS.No.453/2008 இல் உள்ள வழக்கும் OS.No.489/2008 இல் உள்ள தற்போதைய வழக்கும் இணைத்து ஒன்றாக விசாரிக்கப்படுகின்றன. மேற்படி அசல் வழக்குகளானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டு, வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் எடுக்கப்பட்டு, கடந்த 25.08.2025ம் தேதியன்று இருதரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்ததாகவும், OS.No.453/2008 வழக்கில் எதிர் கோரிக்கையிலிருந்து மனுதாரர்கள் நிவாரணம் கோருவதால், OS எண்.453/2008 இல் உள்ள PW1ஐ மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்றும், எனவே, மனுதாரர்கள் தரப்பில் PW1 இன் குறுக்கு விசாரணைக்காக, OS,No.453/2008 இல் உள்ள PW1ஐ திரும்பப் அழைக்க வேண்டும் என்றும் இந்த இரண்டு இடைநிலை மனுக்களும் மனுதாரர்கள்/8 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.3) எனவே, மேற்படி அசல் வழக்குகளின் சூழ்நிலையை கருத்தில் கொள்ளும்போது, வா.சா.1ஐ recall செய்து, மனுதாரர்கள்/8 முதல் 11 பிரதிவாதிகள் (OS No.489/2008ல்) தரப்பில் குறுக்கு விசாரணை செய்வது இருதரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கானதாகவும், சட்டப்படியானது மற்றும் நீதியின் நலன்பொருட்டு உகந்தது என்பதை கருத்தில்க்கொண்டும், மேற்படி வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்வதால் அசல் வழக்குகளில் தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு காரணியாக அமையுமே தவிர, வழக்கு தரப்பினர்கள் யாருக்கும் சட்டத்திற்கு புறம்பான சாதக பாதகம் ஏற்படபோவதில்லை என்பதை கருத்தில்கொண்டு, வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யும்விதமாக அசல் வழக்கை Re-open செய்து PW-1ஐ Recall செய்தும் உத்தரவிடுவது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** இந்த இரண்டு மனுக்களும் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 10.10.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2025.10.10 12:26:40 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**இணைப்பு:-**

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2025.10.10 12:26:49 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.1/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.2/2025
இன்
அசல் வழக்கு எண்.453/2008
(C/W) அசல் வழக்கு எண்.489/2008
செவ்வை உத்தரவு
நாள் : 10.10.2025